**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

| | | |
|---|---|---|
| S.C. Case No | | : 48/2020 |
| Deposition of witness for | Prosecution | : Pw1 |
| | Defence | : |

| | |
|---|---|
| Name | : Shanmugam |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed and on date 02.11.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் தற்போது பேகுபள்ளி எழில் நகரில் குடியிருந்து வருகிறேன். வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும்.அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். 05.10.2019 அன்று ஆயுத பூஜைக்காக காலை 8.30 மணிக்கு என் வீட்டிற்கு அருகில் உள்ள சந்தியா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் கம்பெனி என்னுடையது. அதன் ஓரமாக வாழை செடி வைத்திருந்தேன். வாழை செடியை வெட்டி எடுத்து செல்வதற்காக 8.30 மணிக்கு எனது கம்பெனி அருகில் சென்றேன். என்னுடன் எனது மனைவி எனது மகன் மெய்யப்பன், தம்பி கல்யான் குமார் மற்றும் என்னிடம் வேலை செய்யும் நாகா,ஸ்ரீதர் ஆகியோர் இருந்தார்கள். எனது கம்பெனியில் வேலை செய்யும் நாகப்பா என்பவர் வாழை செடியை வெட்டினார். வாழை செடிகளை வெட்டி வைத்துக்கொண்டிருக்கும் போது எனக்கும் எதிரிக்கும் ஒரே காம்பவுண்டு சுவர் தான்.அந்த காம்பவுண்டு சுவரை தாண்டி எதிரி வாழை செடி மீது எச்சில் உமிழ்ந்தார். என் மனவை பூஜைக்காக எடுக்கும் வாழை செடி எச்சில் உமிழ்ந்ததை பற்றி எதிரி கேட்டார். அதற்கு எதிரி வாடி,போடி,தேவடியா முண்டை,கண்டார ஓளி, என்று கெட்ட வார்த்தைகளால் பேசினார்.நான்போய் பொம்பளையை இப்படி பேசுகிறாயே என்று எதிரியை கேட்டேன்.அதற்கு எதிர் அப்படி தனர்பேசுவேன் மயிரா புடுங்கிருவ என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றார். நான்

என் மனைவியை இந்த செடியை இனிமேல் பயன்படுத்து முடியாது பணம் கொடுத்து வேறு வாங்கி கொள்ளலாம் என்று சொன்னேன். கம்பெனியில்இருந்து வெளியில்வர முயற்சி செய்த போது எதிரி கொடுவாளை எடுத்து வந்து இத்தோடு செத்துத்தொளை என்று சொல்லி என்னை வெட்ட வந்தார். எனது மகன் மெய்யப்பன் அதை தடுத்தார். அதனால் அவரது இடது கைபெருவிரல் துண்டானது. அதையும் மீறி எதிரி வெட்டியதில் எனது பின்புற கழுத்தில் காயம் ஏற்பட்டது. பின்புற தலையில் காயம் ஏற்பட்டது.நான் கம்பெனி வைத்துள்ளேன். அதில் சத்தம் கேட்பதாக எதிரி மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மனு கொடுத்தார். எனது மனைவி பெயரில் கம்பெனி இருந்தது.அதனால்அவர் சென்னைக்கு சென்று வந்து கொண்டிருந்தார். நீதிமன்றத்தில் வழக்கு நடந்து எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது.அதிலிருந்து எதிரிக்கு என்னை கொல்ல வேண்டும் என்று உள்நோக்கம் இருந்தது. நான் தற்பொழுது அந்த கம்பெனியில் தொழில் செய்யவில்லை. அதை குடோன் போல் பயன்படுத்தி வருகிறேன். கம்பெனியில் காரை நிறுத்திவிட்டு இறங்கினால் எதிரி என்னை பார்த்து உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று சொல்வார். என்னை வெட்டியதால் நான் எதிரியிடம் இருந்த கொடுவாளை பிடித்தேன். எதிரியின் மகன் வந்து எதிரியை தள்ளிச்சென்று அவரது வீட்டிற்குள் தள்ளி கதவை சாத்தி விட்டார். என்னை வெட்ட எதிரி பயன்படுத்திய கொடுவாள் நீதிமன்றத்தில் உள்ளது.அந்த கொடுவாள் சா.போ.1. எனக்கும் எனது மகனுக்கும் காயம் ஏற்பட்டதால் ரத்தம் வந்தது. எனது தம்பியும் அங்கிருந்தவர்களும் என்னையும் எனது மகனையும் அரசு மருத்துவமனை ஓசூருக்கு அழைத்து சென்றார்கள். அங்கு முதலுதவி செய்து கொண்டு குணம் மருத்துவமனைக்கு சென்றோம். காலை 10 மணிக்கு சிப்காட் போலிஸ் வந்து என்ன நடந்தது என்று கேட்டார்கள். நான் சொன்னேன். கையெழுத்துப்போட்டு கொடுத்தேன்.என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அது அரசு தரப்பு சான்றாவணம் 1. போலிசார் என்னை விசாரித்தார்கள். மறுபடியும் 10 நான் கழித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

சா.போ.1 கொடுவாளை எதிரி பயன்படுத்திய போது எதிரியின் கையை தான்நான் பிடித்தேன். கொடுவாளை நான் பிடிக்கவில்லை. எதிரி பயன்படுத்திய கொடுவாள் என்ன ஆனது என்று எனக்குத் தெரியாது. சா.போ.1ன் கூரிய முனைப்பகுதி சுமார் 3/4 அடியில் உள்ளது. நான் கம்பெனி கட்டிய இடம் வீட்டமனை தான்.அதை பிரச்சனை வந்ததால் நான் கம்பெனி நடத்துவதை நிறுத்தி விட்டேன். தற்பொழுது கம்பெனி நடத்தவில்லை. கார் ஷெட்டாக கம்பெனியை பயன்படுத்துகிறேன். சம்பவ இடத்தில் கம்பெனி 2 வருடம் நடத்தினேன். மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் இரவு பகலாக எனது கம்பெனியில் சத்தம் வருவதாக எதிரி புகார் கொடுத்திருந்தார். போலிசார் என்னை விசாரரித்த போது நான் தெளிவாக தான் இருந்தேன். போலிஸ் விசாரணையில் சம்பவ இடத்தில் நான் மயங்கியதாகவோ எதிரியின ் கையை பிடித்ததாகவோ எதிரியின் மகன் அழைத்து சென்றார் என்றோ நான் சொல்லவில்லை. சா.போ.1ல் சுமார் 1 அடி நீளத்திற்கு இரத்தக்கறை உள்ளது என்று சொன்னால் சரிதான். சுமார் 1 அடி நீளத்திற்கு வெட்டுக்காயம் எனக்கோ எனது மகனுக்கோ இல்லை என்று சொன்னால் கழுத்து ஒருஅடியில் இருக்காது. எனக்கு சுமார் 5 செ.மீ நீளம் அளவுள்ள் காயம் தான் கழுத்தின் பின்பறம்

ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்தின் ஆழம் 0.5 செ.மீ என்று சொன்னால் அது மருத்துவருக்குத் தான் தெரியும். நான்புகாரிலும்,போலிசார் விசாரணையிலும் நாங்கள் வாழை செடிகளை வெட்டிக்கொண்டிருந்ததாகவும் எதிரி தன் வீட்டு காம்பவுண்டுக்குள் நின்ற எட்டி வாழை செடிகள் மீது எச்சில் உமிழ்நதார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கெட்ட வார்த்தையில் சொன்ன போது நாங்கள் எனது கம்பெனியிலும் எதிரி அவரது வீட்டிலும் இருந்தார் என்று சொன்னால் சரிதான். போலிசர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சொன்னார்கள்.அதை நான் பார்க்கவில்லை. நான் மருத்துவமனையில்இருந்தேன். நான் சொல்வது போல் எனது கம்பெனியில் இருந்த வாழை மரங்கள் வெட்டப்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் நாங்கள் 6 பேர் இருந்தோம். எதிரி தனியாக தான்இருந்தார். எதிரியை அவரது மகன் அழைத்து சென்றதாக சொன்னபோது கத்தி எடுத்து சென்றாரா என்றுஎனக்குத் தெரியாது .நான் பார்க்கவில்லை. எதிரி என்னை கீழே தள்ளி விட்டார். நான் புகார் கொடுத்தபோதும் போலிசார் என்னை விசாரித்த போதும் கொடுவாள் எங்கிருந்தது என்று என்க்குத் தெரியாது. எனக்கு கத்திக்கும் கொடுவாளுக்கும் உள்ள வித்தியாசம் தெரியும். நான் மருத்துவரிடம் சொன்ன போத நான் என்னை கத்தியால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. எனக்கு கழுத்தில் ஏற்பட்ட காயம் தவிர வேறு காயம் இல்லை என்று சொன்னால் சரிதான். கொடுவாளின் எந்த பாகம் பட்டதில் எனக்கு காயம் ஏற்பட்டது என்று தெரியாது.எனக்கு வெட்டு பின்புறமாக ஏற்பட்டது. சம்பவம் எனது கம்பெனியில் உள்ள வாழை மரத்திற்கு அருகில் நடைபெற்றது. போலிசார் சம்பவம் எனது கம்பெனிக்கு கேட்டுக்கு முன்பு உள்ள வேப்பமரத்திற்கு அருகில் நடைபெற்றதாக சொல்லியிருந்தால் அது தவறு தான். எனது மகனுக்கு காயம் பட்டதும் வாழை மரம் அருகில் வைத்து தான். நாங்கள் 4,5 மரங்களை வெட்டினோம்.10 மரங்கள் இருந்தது.அதில் 4,5 மரங்களை வெட்டினோம். வாழை செடிகளை சமையலுக்கு பயன்படுத்தும் கத்தியை வைத்து வெட்டினோம். கம்பெனி வைத்திருந்த இடத்தை வாங்கியதில் இருந்து எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை தான். சம்பவம் நடைபெற்றது ஆயுத பூஜைக்கு முந்தையை நாள். நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன வித்த்தில் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் வேப்பமரத்தில் ஏறி கியையை வெட்டிக்கொண்டிருந்தார் என்றும் நான் மரத்தின் கீழே நின்று கிளைகளை எடுத்துக்கொண்டிருந்தேன் என்றும் என் மகன் தவறுதலாக அவரது கை விரலை வெட்டிக்கொண்டார் என்றும் அப்பொழுது அவர்வைத்திருந்த கொடுவாள் தவறி விழுந்து எனது கழுதின் பின்புறம் பட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி அடிக்கடி எங்கள்கம்பெனி மீது புகார் கொடுத்து எனக்கு தொந்தரவு செய்கிறார் என்ற காரணத்திற்காக நான் எங்களுக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரி மீத பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால்சரியல்ல. முத்துக்குமார் எனது மனைவியின் தங்கை கணவர். கருணாகரன் எனது பக்கத்து வீட்டுக்காரர். கல்யாண் குமார் என் தம்பி. நாகா மற்றும் ஸ்ரீதர் என்னிடம் வேலைசெய்கிறவர்கள். சாட்சி மகாலட்சுமி எனது மனைவி. சாட்சி மெய்யப்பன் எனது மகன். எனது பொய்யான வழக்கிற்கு எனது குடும்ப உறுப்பினர்களும் பணியாட்களும் சாட்சியாக

சொல்லியுள்ளேன் என்றும் உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் பொது மக்கள்சாட்சியாக இருந்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல.அங்கு இருந்தது நாங்கள் மட்டும் தான்.

மறு விசாரணை இல்லை